# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
IN THE COURT OF III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

**M.C.O.P. No. 539/2021**

DEPOSITION OF WITNESS FOR P.W.2

| | |
|---|---|
| Name | : சுனில்குமார் |
| Father's Name | : செல்வன் |
| Village | : தடிக்காரன்கோணம் |
| Taluk | : தோவாளை |
| Calling | : |
| Age | : 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of October 2025

<u>முதல் விசாரணை</u> :–

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். நான் சொல்லிதான் நிரூபண வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது. என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் சா.சா.ஆ.1. (அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்பட்டது).

<u>2, 3 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

விபத்தில் காயம்பட்ட டென்சன் எனது பக்கத்து வீட்டுக்காரர். அவர் எனக்கு உறவினர் கிடையாது. பழக்கமானவர். விபத்து நடந்த ரோடு கிழ மேல் ரோடு. நான் சென்று பார்க்கும்போது காயம்பட்ட

டென்சன் என்பவரை ஆட்கள் ஓரமாக தூக்கி வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். நான் விபத்தை பார்க்காமல் பார்த்ததாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் மனுதாரர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
IN THE COURT OF III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

**M.C.O.P. No. 539/2021**

DEPOSITION OF WITNESS FOR P.W.1

| | |
|---|---|
| Name | : புஷ்பராணி |
| Husband's Name | : டென்சன் |
| Village | : தடிக்காரன்கோணம் |
| Taluk | : தோவாளை |
| Calling | : |
| Age | : 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of October 2025

<u>முதல் விசாரணை</u> :–

நான் இம்மனுவில் 2ம் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். நான் சொல்லிதான் நிரூபண வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது. கீரிப்பாறை காவல் நிலைய குற்ற எண்.32/2019 வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1. குற்ற எண்.32/2019 வழக்கின் குற்ற இறுதி அறிக்கை நகல் ம.சா.ஆ.2. விபத்தில் இறந்துபோன எனது கணவர் டென்சன் என்பவரின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று நகல் ம.சா.ஆ.3. விபத்தில் இறந்துபோன எனது கணவர் டென்சன் என்பவருடைய நாகர்கோவில், முத்து நியூரோ மருத்துவமனையில் வழங்கிய Discharge

Summary ம.சா.ஆ. 4. விபத்தில் இறந்துபோன எனது கணவர் டென்சன் என்பவருடைய நாகர்கோவில், முத்து நியூரோ மருத்துவமனையில் வழங்கிய Medical Certificate ம,சா.ஆ.5. விபத்தில் இறந்துபோன எனது கணவர் டென்சன் என்பவரின் CT Scan report (5 எண்ணம்) ம.சா.ஆ.6. விபத்தில் இறந்துபோன எனது கணவர் டென்சன் என்பவரின் வாரிசு சான்று நகல் ம.சா.ஆ.7. விபத்தில் இறந்துபோன எனது கணவர் டென்சன் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.8. விபத்தில் இறந்துபோன எனது கணவர் டென்சன் என்பவரின் சிகிச்சை காலத்தில் ஏற்பட்ட மருத்துவ ரசீதுகள் ரூ.4,45,194/- (262 எண்ணம்) ம.சா.ஆ.9. விபத்தில் இறந்துபோன எனது கணவர் டென்சன் என்பவருக்கு சிகிச்சை காலத்தில் வழங்கப்பட்ட மருத்துவரின் பரிந்துரை சீட்டுகள் ம.சா.ஆ.10. TN 67 AJ 2766 பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.11. விபத்தில் இறந்துபோன எனது கணவர் டென்சன் என்பவரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.12. (அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்பட்டது). 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.13. (அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்பட்டது). 3ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.14. (அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்பட்டது). 4ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.15. (அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்பட்டது). (ம.சா.ஆ.4, 5, 8, 9 ஆவணங்கள் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது).

**2, 3 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

விபத்தில் காயம்பட்ட டென்சன் எனது கணவர் என்றால் சரிதான். அவருடைய வயது, வருமானம் ஆகியவற்றை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.ம.சா.ஆ.2 குற்ற இறுதி அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது இதச பிரிவு 279, 338 ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது இதச பிரிவு 304 (A) படி வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.6 CT Scan அறிக்கையில் எனது கணவர் தலையில் எடுக்கப்பட்ட காயத்தினால் எந்த பாதிப்பும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து நடந்த ரோடு வீரபுளியிலிருந்து தடிக்காணகோணம் செல்லக்கூடிய ரோடு என்றால் சரிதான். அது கீழமேல் ரோடு என்றால் எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் எனது கணவர் தான் பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல், சாலை விதிகளை கடைபிடிக்காமல் திடீரென சாலையை கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்துக்கு எனது கணவரும் காரணம் என்றால் சரியல்ல. பிரதான மனுவை தாக்கல் செய்யும் போது எனது கணவர் பேச முடியாமல் இருந்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இந்த மனு தாக்கல் செய்யும் போது எனது கணவர் நல்ல உடல்நிலையிலும், மன நிலையிலும்

இருந்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் 08.10.2019 முதல் 04.01.2020 வரை உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு பின்பு புறநோயாளியாக பல்வேறு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் விபத்து நடந்து 2 ஆண்டுகள் கழித்து 06.09.2021 அன்று இறந்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் எப்படி இறந்தார் என்பதற்கு சடலக்கூறாய்வு எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது கணவர் இயற்கை மரணம் அடைந்தார் என்றாலும், அதனால் தான் சடலக்கூறாய்வு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இயற்கை மரணமடைந்த எனது கணவர் விபத்து காயங்களினால் இறந்தார் என்று உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு நஷ்ட ஈடு கிடைக்க வேண்டும் என்றால் நாங்கள் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களில் கண்ட செலவு தொகை மட்டுமே கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.